05.02.2026

MCOP.N0.855/2024

P.W.1. திருமதி.பேச்சிசெல்வி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

விபத்து சமயத்தில் நான் என் கணவருடன் சண்டையிட்டு கருத்துவேறுபாடு காரணமாக எனது தந்தை வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனது கணவர் கொத்தனார் வேலை பார்த்தார் என்றும் மாதம் ரூ.25,000/- சம்பளம் பெற்றார் என்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது கணவர் கட்டுமான தொழிலாளர் வாரியத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். நானும், என் கணவரும் விபத்திற்கு முன்பு எவ்வளவு நாட்கள் பிரிந்திருந்தோம் என்றால் எனக்கு ஆபசன் ஆகிவிட்டதால் பிரிந்திருந்தோம். எனது மாமனார் தான் விபத்து குறித்து புகார் கொடுத்ததார். எனது மாமனாரை விசாரித்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது கணவர் விபத்தில் சமயத்தில் தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் இறந்தார் என்றால் சரிதான். அவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தார் என்று மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் எண் தெரியுமா என்று சொன்னால் தெரியாது. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கத்தெரியாமல் இயக்கி 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்திற்கு1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் எந்த விதத்திலும் காரணம் இல்லை

என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லைஎன்பதால் அவர் தான் விபத்திற்கு பொறுப்பு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.

05.02.2026

MCOP.N0.855/2024

P.W.2. திரு.கணபதி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :–

நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் அழைத்தன்பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. முப்பிடாதிராஜவின் தந்தை கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முப்பிடாதிராஜவின் அப்பா பெயர் வேம்பன். வேம்பனுக்கு தான் விபத்து பற்றி தெரியும் என்றால் சரிதான். வேம்பனை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்த்தது சம்மந்தமாக போலிசார் என்னைவிசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த ரோடு தென்வடல்ரோடும்,கிழமேல்ரோடும் சந்திக்கும்ரோடு என்றால் சரிதான். இறந்துபோன முப்பிடாதிராஜ தெற்கில் இருந்து வடக்குநோக்கி வந்தார் என்றால் சரிதான். தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்து மேற்காக திரும்பும்போது தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பகுதியில் எந்த வாகனமும் வேகமாக வரமுடியாது என்றால் சரிதான். இறந்துபோன முப்பிடாதிராஜா லாரியின் வலதுபின்பக்க பகுதியில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. லாரி முன்பகுதியில் மோதிவிட்டது. இந்த விபத்திற்கு விபத்தில் இறந்துபோன முப்பிடாதிராஜாவின் கவனக்குறைவு, அஜாக்கிரதையும் தான் காரணம் என்றும் 1ம்

எதிர்மனுதாரர் ஓட்டுநர் எந்த விதத்திலும் காரணம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.